## ஆகஸ்ட் - 22

**"என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" - லூக் 2 : 49.**

போதகருடைய இந்த வார்த்தையினாலே வெளிப்பட்டிருக்கிற அவருடைய ஆவியை நாமும் உடையவர்களாக இருக்க வேண்டாமா? கர்த்தருடைய உண்மையான பரிசுத்தவான்களுக்கு தங்களுக்கென்று சொந்தமான ஒரு உத்தியோகமில்லை. ஏனென்றால் பிரதிஷ்டையில் தங்களுக்குண்டான எல்லாவற்றையும் கர்த்தருக்கு கொடுத்துவிட்டார்கள். அவர்கள் கர்த்தருக்காக தர்மகர்த்தாக்களாக (ஒப்படைக்கப்பட்டவைகளுக்குப் பொறுப்பாளிகளாக) தங்களுடைய தொழிலை நிர்வகிக்கிறார்கள். தங்களுடைய மரண சமயத்தில் தங்களுடைய பிள்ளைகளுக்கோ, அல்லது தங்களுடைய சிநேகிதருக்கோ அவர்களுக்கு கெடுதி கொடுக்கக் கூடியவிதமாக செழிப்பான நிலைமையில் அது அவர்களுக்கு மாற்றப்படுவதற்கல்ல. தர்ம கர்த்தாவினுடைய மரணத்துக்கு முன் தான் ஞானமாக அறிந்திருக்கிறதற்கு ஏற்றவிதமாக அது தன்னால் உபயோகிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அப்போது அவருடைய பொறுப்பு முடிந்துவிடும். அவன் கணக்கு கொடுக்க வேண்டும். **- Z '03, 53(R 3148)**

பூரண பையனாக இருந்த இயேசுவுக்கு கர்த்தருடைய காரியங்களில் ஈடுபட்டிருப்பது இயல்பானதாய் இருந்தது. ஆகையால், தான் இவ்விதமாக நடந்து கொள்ள தகுதியுள்ளவராய் இருந்தவரை யோசேப்பும் மரியாளும் காணத்தவறிவிட்டார்கள் என்பதை அறிந்த இயேசு வியப்படைந்தார். இங்கே வாலிபருக்கு வயோதிபருக்கும் ஒரு படிப்பினை இருக்கிறது. அதாவது, தூண்டப்படாமலேயே தேவனுடைய காரியங்களில் சிரத்தை கொள்கிறவர்கள் பாக்கியவான்கள். மிகவும் சமீபத்திலுள்ளவர்களும் மிகவும் அருமையான மற்றவர்களும் கூட தேவனுடைய ஜனங்களுடைய நடத்தையைப் புரிந்துகொள்ள தவறிப்போய், தங்கள் சார்பாக அவர்கள் அநியாயமாகவோ அல்லது ஜாக்கிரதையற்ற விதமாய் நடந்து கொள்கிற விதமாகவோ கருதுகிறார்கள். ஒருநாள் மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள் என்றும், இதற்கிடையில் மற்றவர்கள் நிந்தித்தாலும் போதகரின் புகழ்ச்சியில் கர்த்தருடைய ஜனங்கள் திருப்தியாயிருப்பார்கள். **- P '35, 117.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 40:7-9; எபி 10:7,9 ; யோவா 2:16,17; 4:31-34; 7:14,15,46; 9:4; மத் 7:28,29; 10:37; ஏசா 50:4; லூக் 4:22,32; யோசு 1:8; ஏசா 8:20; ஏரே 8:9; லூக் 24:27; அப் 17:11; சங் 1:1-3; 1பேது 1:10,11.**

**கோபுர வாசிப்பு : Z '12, 30 (R 4957)**

**வினாக்கள்: இந்த வாரத்தில் நான் கர்த்தருடைய வார்த்தையைக் கற்று அதை பிரசித்தப் படுத்தினேனா? ஏன்? எப்படி? பலன்கள் எவை?**